1986 நவம்பர் 24]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் பதவிகளில் பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினருக்கு இட ஒதுக்கீடு இல்லாமல், ஊராட்சித் தேர்தல்களை நடத்தியதற்கு எதிராக அரசு மீது, டெல்லி உச்ச நீதிமன்றத்தில் ஒரு ரிட் மனுவும், ஒரு உரிமையியல் மேல் முறையீடும் போடப்பட்டுள்ளது.

(ஆ) ஆம்.

ஆண்டிப்பட்டி அரசினர் மருந்தகம்.

152—(*வினா எண். 2000) திரு. இரா. முத்தையா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் ஆண்டிப்பட்டியில் உள்ள அரசினர் மருந்தகத்தை மருத்துவமனையாக உயர்த்தும் கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது தரம் உயர்த்தப்படும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மதுரை மாவட்டம் ஆண்டிப்பட்டியில் உள்ள அரசினர் மருந்தகத்தை 24 படுக்கைகள் கொண்ட பொதுப்பிரிவு, 8 படுக்கைகள் கொண்ட மகப்பேறு பிரிவுடன், அறுவை அரங்கு, எக்ஸ்ரே பிரிவு மற்றும் மருத்துவர்கள் குடியிருப்பு இல்லங்கள் கொண்ட மருத்துவமனையாக மாற்ற அரசாணை (நிலை) எண். 1110, சுகாதாரம், நாள் 9–6–1986-ல் ஆணையிடப்பட்டுள்ளது.

கோவை மருத்துவமனையில் தீப்புண் தீவிர சிகிச்சைப் பிரிவு.

153—(*வினா எண். 6654) திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை அரசினர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தீப்புண் சிகிச்சைக்கு தீவிர சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் செயல்படத் தொடங்கும் ?